## முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான ‘திராவிட மாடல்’ ஆட்சியில் - மூன்றாண்டுகளில்

# 46 புதிய தொழிற்சாலைகள் திறப்பு!

## 1,39,725 பேருக்கு வேலைவாய்ப்புகள்! ஒன்றிய அரசின் புள்ளியியல் அமைச்சக ஆய்வு உறுதிப்படுத்தியுள்ளது !

**சென்னை, அக். 4-**

**தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியில் 2021க்கு பின் 46 புதிய தொழிற்சாலைகள் திறக்கப் பட்டுள்ளன எனவும் 1,39,725 இளைஞர் களுக்கும் மகளிருக்கும் வேலைவாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன என்றும் தொழில் வளர்ச் சியில் புரிந்துவரும் சாதனைகளால் தமிழ்நாடு இந்தியாவின் தலைசிறந்த மாநிலமாய் திகழ் கிறது எனவும் ஒன்றிய அரசின் புள்ளியியல் அமைச்சக ஆய்வு உறுதிப்படுத்தியுள்ளது.**

இதுகுறித்த அரசின் செய்தி வெளியீடு வருமாறு:-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்றது முதல் தொழில் வளர்ச்சிக்கு அளித்து வரும் அளப்பரிய ஊக்கம் காரண மாகப் பல்வேறு புதிய தொழிற்சாலைகள் தமிழ்நாட்டில் தொடர்ந்து திறக்கப்பட்டு வரு கின்றன. அவற்றின் மூலம் இளைஞர் சமு தாயத்தினர் வேலை வாய்ப்புகளைப் பெற்று வருகின்றனர்.

2021 ஆம் ஆண்டில் திராவிட மாடல் ஆட்சி தொடங்கிய பின் 2030 ஆம் ஆண் டிற்குள் தமிழ்நாடு ஒரு டிரில்லியன் பொருளா தார வளர்ச்சி பெற்ற மாநிலமாகும் எனும் இலக்குடன் தொழில் முதலீட்டாளர்கள் மாநாடுகள் நடத்தப்பட்டு புதிய தொழில் முத லீடுகளை ஈர்க்கும் பணிகள் தொடங்கப் பட்டன.

### முதலீட்டாளர்களின் முதல் முகவரி தமிழ்நாடு!

முதற்கட்டமாக, முதலீட்டாளர்களின் முதல் முகவரி தமிழ்நாடு என்ற பெயரில் சென்னை கோயம்புத்தூர், தூத்துக்குடி ஆகிய நகரங் களில் நடத்தப்பட்ட முதலீட்டாளர்கள் மாநாடு கள் மூலம் ரூ.1,90,803 கோடி ரூபாய்க்கான முதலீடுகள் ஈர்க்கப்பட்டு, 2,80,600 பேருக்கு வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டன.

இரண்டாம் கட்டமாக, ஐக்கிய அரபு நாடு கள், சிங்கப்பூர், மலேசியா, ஜப்பான், ஆகிய நாடுகளுக்குப் பயணம் மேற்கொண்டு 17 ஆயிரத்து 371 பேருக்கு வேலை வாய்ப்பு களை ஏற்படுத்துகிற வகையில், 7 ஆயிரத்து 441 கோடி ரூபாய் மதிப்பிலான முதலீடுகள் பெறப்பட்டன.

மூன்றாம் கட்டமாக, 2024 ஜனவரி 7, 8 ஆகிய நாட்களில் சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் தமிழ்நாடு அரசு நடத் திய உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் முன் எப்போதும் இல்லாத அளவாக, 631 ஒப்பந் தங்கள் மூலம் 6,64,180 கோடி ரூபாய் முதலீடுகளும், அவற்றின்மூலம் 14,54,712 பேருக்கு நேரடி வேலைவாய்ப்புகளும் 12,35,945 பேருக்கு மறைமுக வேலை வாய்ப்பும் என மொத்தம் 26,90,657 வேலைவாய்ப்புகளுக்கு உறுதி செய்யப்பட் டன.

நான்காம் கட்டமாக, 27.12.024 அன்று ஸ்பெயின் நாட்டிற்குப் புறப்பட்டுச் சென்று அங்குள்ள பொருளாதாரம் மற்றும் வர்த்தகத் துறை அமைச்சக அதிகாரிகள், ஸ்பெயின் தொழில் கூட்டமைப்பு பொறுப்பாளர்கள், இன்வெஸ்ட் ஸ்பெயின் என்ற அமைப்பைச் சேர்ந்தவர்கள் ஆகியோரைச் சந்தித்து தமிழ் நாட்டிலுள்ள தொழில் வாய்ப்புகளையும், அரசு வழங்கும் சலுகைகளையும், கிடைக் கும் திறன் வாய்ந்த மனித வளத்தையும் எடுத்துக் கூறி, தமிழ்நாட்டில் தொழில் தொடங்கிட வருமாறு முதலமைச்சர் அவர் கள் அழைப்பு விடுத்தார்கள். அவற்றின் பய னாக ரூ.3,440 கோடி ரூபாய் அளவிற்குத் தொழில் முதலீடுகளுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

### அமெரிக்காவில் 19 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்!

ஐந்தாவது கட்டமாக, தமிழ்நாடு முதல மைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், 22.9. 2024 அன்று அமெரிக்கா பயணம் மேற் கொண்டு உலகின் முன்னணி தொழில் நிறுவனங்களின் முதலீட்டாளர்களைச் சந் தித்து தமிழ்நாட்டில் உள்ள தொழில் வாய்ப்பு களையும் ஆற்றல் வாய்ந்த மனித வளங் களையும் எடுத்துரைத்து தொழில் தொடங்கிட வருமாறு அழைப்பு விடுத்தார்கள். அதன் பயனாக அமெரிக்காவில் 19 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செய்து கொள்ளப்பட்டன. அந்த ஒப்பந்தங்கள் மூலம் தமிழ்நாட்டு இளைஞர் களுக்கு 11,516 புதிய வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

> ஒன்றிய அரசின் புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்ச கம் 2023-2024 ஆம் ஆண்டுக் கான கள ஆய்வையும் கணக்கெ டுப்பையும் நடத்தியதில் உற்பத்தி தொழில்களில் தமிழ்நாட்டில் 7.5 சதவிகித வேலை வாய்ப்பு அதிகரித் துள்ளதாகவும், நாட்டிலேயே அதிக தொழிற்சாலைகள் மற்றும் வேலை வாய்ப்பில் தமிழ்நாடு முத லிடத்தில் உள்ளதாகவும் அறிவித் துள்ளது.

வெளிநாடுகளுக்குப் பயணம் செல்கிறார் கள் தொழில்கள் வரவில்லையே என்று எதிர்க்கட்சியினர் பொறாமையால் புழுங்கு கின்றனர். அவர்கள் உண்மையை அறியாத வர்கள். மக்களிடம் தவறான தகவல்களைத் தந்து, மக்களிடம் ஆட்சிக்கு எதிராக அவதூறான கருத்துகளை விதைக்க முயல்கிறார்கள்.



அது அவர்களின் வீண் முயற்சி முத்தமி ழறிஞர் கலைஞர் அவர்கள், “உண்மையை மறைக்க முயல்வது, விதையைப் பூமிக்குள் மறைக்க முயல்வதற்குச் சமம்” என்று கூறு வார்கள். அதுபோலத்தான் இவர்கள், தி.மு.க ஆட்சியின் சாதனைகளை மறைக்க முயல் கிறார்கள். திராவிட மாடல் ஆட்சி திறந்துள்ள தொழிற்சாலைகள் ஆட்சியின் பெருமையை உலகறியச் செய்யும் என்பது உறுதி.

### 19 தொழில் சாலைகள் முதல்வர் திறந்து வைத்தார்!

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடந்த 21.8.2024 அன்று, தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த் தகத் துறைச் சார்பில் சென்னையில் நடை பெற்ற நிகழ்ச்சியில் 17,616 கோடி ரூபாய் முதலீட்டில் 19 தொழில்சாலைகளைத் திறந்து வைத்தார்கள் அவை:

1. திருவள்ளூர் மாவட்டத்தில் மருத்துவ உபகரணங்கள் தயாரிக்கும் ஓம்ரான் தொழிற்சாலை;
2. காஞ்சிபுரம் மாவட்டத்தில் இயந்திர மின் னணுவியல் தயாரிக்கும் ஹிபி (HiPi) நிறுவனத் தொழிற்சாலை;
3. அதே காஞ்சிபுரம் மாவட்டத்தில் மின்ன ணுவியல் தயாரிக்கும் மதர்சன் எலெக்ட் ரானிக்ஸ் தொழிற்சாலை;
4. அதே காஞ்சிபுரம் மாவட்டத்தில் ஜீரோ ஜின் டெவலப்மெண்ட் பிரைவேட் லிமி டெட் நிறுவனத்தின் தொழில் பூங்கா;
5. திருவள்ளூர் மாவட்டத்தில் மோட்டார் வாகன உதிரி பாகங்கள் தயாரிக்கும் டி.வி.எஸ்.தொழிற்சாலை;
6. சென்னையில் தகவல் தொழில்நுட்பத் துறையில் எல் அண்ட் டி நிறுவனத்தின் புத்தாக்க மையம்;
7. செங்கல்பட்டு மாவட்டத்தில் தொழில் நுட்ப மையம் சார்பில் ரோனால்ட் நிஸ் ஸான் தொழில்நுட்பம் மற்றும் வர்த்தக மையம்;
8. சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர், கிருஷ்ணகிரி, விழுப்புரம், விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் சுந்தரம் ஃபாஸ் டனர்ஸ் தொழில் நிறுவனத்தின் பொது உற்பத்தி மையங்கள்;
9. காஞ்சிபுரம், இராணிப்பேட்டை மாவட்டங்களில் எஸ்ஜாய் குழுமம் சார் பில் இரசாயனத் தொழிற்சாலை:
10. ஈரோடு, திருப்பூர் மாவட்டங்களில் ஏனஸ் ராம்ராஜ் நிறுவனத்தின் ஆடைகள் தயா ரிப்பு தொழிற்சாலை;
11. திருவள்ளூர் மாவட்டத்தில் மருத்துவப் பொருள்கள் தயாரிக்கும் கேப்னின் பாய்ண்ட்ஸ் தொழிற்சாலை;
12. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் வெக் இண் டஸ்ட்ரீஸ் நிறுவனத்தின் பொது உற்பத்தி தொழிற்சாலை;
13. ஈரோடு மாவட்டத்தில் மில்க்கி மிஸ்ட் நிறு வனத்தின் உணவு பதப்படுத்துதல் தொழிற்சாலை;
14. காஞ்சிபுரம் மாவட்டத்தில் சுவிட்சர்லாந்து நாட்டைச் சேர்ந்த குரிட்விண்ட் பிரை வேட் லிமிடெட் நிறுவனத்தின் பொது உற்பத்தி விரிவாக்கத் தொழிற்சாலை;
15. காஞ்சிபுரம் மாவட்டத்தில் ஹைபுரோ ஹெல்த் கேர் தொழிற்சாலை விரிவாக்கம்;
16. திருவண்ணாமலை மாவட்டத்தில் ராயல் என்பீல்டு நிறுவனத்தின் மோட் டார் வாகன தொழிற்சாலை;
17. காஞ்சிபுரம் மாவட்டத்தில் ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த குரூபோ காஸ்டோஸ் நிறுவனத்தின் மோட்டார் வாகன உதிரி பாகங்கள் தயாரிக்கும் தொழிற்சாலை;
18. திருவள்ளூர் மாவட்டத்தில் ஜிபி சல்ஃ போனேட்ஸ் தொழிற்சாலையின் இரசா யனத் தொழிற்சாலை;
19. காஞ்சிபுரம் மாவட்டத்தில் மதர்சன் ஹெல்த் நிறுவனத்தின் மருத்துவ உபக ரணங்கள் தயாரிக்கும் தொழிற்சாலை;

ஆகிய 19 தொழிற்சாலைகளிலும் தமிழ் நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர் கள் உற்பத்திகளைத் தொடங்கி வைத்தார் கள்.

இந்த 19 தொழிற்சாலைகளும் மொத்தம் 17 ஆயிரத்து 616 கோடி முதலீட்டில் தொடங் கப்பட்டவை. இந்த 19 தொழிற்சாலைகளி லும் மொத்தம் 64 ஆயிரத்து 968 இளை ஞர்கள் வேலை வாய்ப்புப் பெற்றுள்ளனர்.

இவை தவிர மேலும், பல தொழிற்சா லைகளும் தொடங்கப்பட்டு உற்பத்திகளில் ஈடுபட்டுள்ளன.

### திராவிட மாடல் ஆட்சியின் அக்கறை!

19 புதிய தொழிற்சாலைகளை தொடங்கி வைத்ததுடன், அதே நாளில் தமிழ்நாடு முத லமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 51,157 கோடி ரூபாய் முதலீட்டிலான 28 புதிய தொழிற்சாலைகளுக்கு அடிக்கல் நாட் டியுள்ளார்கள். அந்தத் தொழிற்சாலைக ளின் வாயிலாக, 41 ஆயிரத்து 835 இளை ஞர்களுக்கு வேலை வாய்ப்புகள் கிடைக்கும்.

இவற்றுடன், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ரூ.9,000 கோடி முதலீட்டில் 5,000 இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் டாடா மோட் டார்ஸ் நிறுவனத்தின் வாகன உற்பத்தித் தொழிற்சாலை அமைப்பதற்காக இராணிப் பேட்டைக்கு நேரடியாகச் சென்று அங்கு சிப் காட் பனப்பாக்கம் தொழிற் பூங்காவில் அடிக்கல் நாட்டியுள்ளார்கள்.

இத்தொழிற்சாலைக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் 2024 மார்ச் மாதம் நடைபெற்று 6 மாதங்களில் தொழிற்சாலை அமைக்கப்ப டுகிறது என்பது திராவிட மாடல் அரசு தொழில் வளர்ச்சியில் கொண்டுள்ள அக்க றைக்குச் சிறிய சான்றாகும்.

### முந்தைய ஆட்சியோடு ஒப்பீடு:

திராவிட மாடல் அரசு புதிய புதிய தொழிற் சாலைகளை திறந்து வரும் சூழ்நிலையில் முந்தைய ஆட்சிக் காலத்தின் தொழில்வ ளர்ச்சி பணிகளை ஒப்பிட்டு நோக்குவது இந்த அரசின் சாதனைகளை மேலும் தெளி வுபடுத்தும்.

அதாவது, 2016-2021, ஆகிய 5 ஆண்டு களில் முந்தைய ஆட்சியில், 15 ஆயிரத்து 543 கோடி ரூபாய் முதலீட்டில் 10,316 இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பளித்திடும் 21 தொழிற்சாலைகளுக் குப் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செய்து கொள்ளப்பட்டு: அவற்றுள் 12 தொழிற்சா லைகள் மட்டுமே தொடங்கப்பட்டு உற்பத்தி யில் ஈடுபட்டுள்ளன.

## தொழில் வளர்ச்சியில் சாதனை ! இந்தியாவின் தலைசிறந்த மாநிலம் தமிழ்நாடு !

ஆனால், திராவிட மாடல் அரசு 3 ஆண்டு களில் மொத்தம் 31 லட்சம் இளைஞர்க ளுக்கு வேலை வாய்ப்புகள் அளிக்கத்தக்க வகையில் ரூ.9.74 லட்சம் கோடி முதலீடுகள் ஈர்க்கப்பட்டு முதலில் 27 புதிய தொழிற்சாலைகளை திறந்து வைத்துள் ளது. அத்துடன் மேலும் 19 தொழிற்சாலை கள் 17,616 கோடி ரூபாய் முதலீட்டில் மாண் புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளன. ஆக மொத்தம் 46 புதிய தொழிற்சாலைகள் இதுவரை திறந்து வைக்கப்பட்டுள்ளன. மேலும், பல்வேறு தொழிற்சாலைகள் வந்து கொண்டிருக்கின் றன. இவற்றின் காரணமாக திராவிட மாடல் அரசின் தொழில் வளர்ச்சி சாதனைகள் இந் திய அளவில் சிறந்து விளங்குகின்றன இதனை ஓரிரு நாட்களுக்கு முன் ஒன்றிய அரசின் புள்ளியியல் அமைச்சகம் வெளியிட் டுள்ள செய்தி உறுதிப்படுத்தியுள்ளது.

### ஒன்றிய அரசின் புள்ளியியல் அமைச்சகம் பாராட்டும் தமிழ்நாட்டு தொழில்வளம்:

**ஒன்றிய அரசின் புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம் 2023-2024 ஆம் ஆண்டுக்கான கள ஆய்வையும் கணக் கெடுப்பையும் நடத்தியதில் உற்பத்தி தொழில் களில் தமிழ்நாட்டில் 7.5 சதவிகித வேலை வாய்ப்பு அதிகரித்துள்ளதாகவும், நாட்டி லேயே அதிக தொழிற்சாலைகள் மற்றும் வேலை வாய்ப்பில் தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளதாகவும் அறிவித்துள்ளது.**

எனவே, தமிழ்நாடு தொடர்ந்து புரிந்துவரும் சாதனைகள் தொழில் வளர்ச் சியில் இந்தியாவின் தலைசிறந்த மாநிலம் தமிழ்நாடு என்னும் வரலாற்றைப் பறை சாற்றும்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**GREATER CHENNAI CORPORATION**
**PUBLIC HEALTH DEPARTMENT - VETERINARY SECTION**

P.H.D.Vet.Sec.A2/0754/2024 **SHORT E - TENDER NOTICE** Dated : 03.10.2024

*Tenders are invited for the following work as per details furnished below:*

Providing of 6 Nos. of Veterinary Doctors for Veterinary Public Health Activities of Veterinary Section, Public Health Department of Greater Chennai Corporation for the period of one year on contract basis.

***Value of Work Rs.36,36,288/-*** | ***EMD amount Rs.36,362/-***

*Tender date and Time : 10.10.2024 upto 3.00 P.M*
*Tender open date and Time : 10.10.2024 upto 3.30 P.M*
*For more information see www.tntenders.gov.in*

DIPR / 4058 / Tender / 2024 **CITY HEALTH OFFICER**




திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்ட திமுக செயற்குழுக் கூட்டத்தில் பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு உரையாற்றினார். உடன் சட்டப்பேரவைத் துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, வடக்கு மாவட்ட செயலாளர் எம்.எஸ்.தரணிவேந்தன் எம்.பி., டாக்டர் எ.வ.வே.கம்பன், கோ.கண்ணன், ஆர்.ராஜசேகர்ன், சி.என்.அண்ணாதுரை எம்.பி., சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி, பெ.சு.தி.சரவணன், எஸ்.அம்பேத்குமார், ஒ.ஜோதி, பொன்.முத்து, ஆர்.சிவானந்தம், வ.அன்பழகன், ஆர்.வேல்முருகன், எஸ்.பன்னீர்செல்வம், ந.பாண்டுரங்கன், பிரியா விஜயரங்கன், க.லோகநாதன், டி.ஏ.தட்சணாமூர்த்தி, ஜெயராணிரவி, பார்வதிசீனுவாசன், க.சௌந்தரராசன், சிவ.ஜெயராஜ், ப.கார்த்திவேல்மாறன் உட்பட பலர் உள்ளனர்.



வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி. மூர்த்தி தலைமையில் நேற்று (03.10.2024) சென்னை நந்தனம் ஒருங்கிணைந்த வணிகவரி (ம) பதிவுத் துறை அலுவலகக் கூட்டரங்கில் 2024 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்திற்கான அனைத்து துணை பதிவுத் துறை தலைவர்கள், மாவட்ட பதிவாளர்கள் (நிர்வாகம் (ம) தணிக்கை), மாவட்ட வருவாய் அலுவலர்/தனித் துணை ஆட்சியர் (முத்திரை) மற்றும் உதவி செயற்பொறியாளர்கள் ஆகியோரின் பணித் திறன் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வணிகவரி மற்றும் பதிவுத் துறை அரசு முதன்மைச் செயலாளர் பிரஜேந்திர நவ்நீத், பதிவுத் துறை தலைவர் தினேஷ் பொன்ராஜ் ஆலிவர், கூடுதல் பதிவுத் துறை தலைவர்கள் மற்றும் பதிவுத் துறை அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.